தில் போகிற போது திடீர் என்று எங்கேயாவது பிரேக்டவுன் ஆகிவிடுகிறது. 60 மைல் வேகத்திலே போன கார் இன்று திடீ ரென்று ஓடாமல் நின்றுவிட்டதே என்று யாரும் வருத்தப்படு வதே இல்லை. அந்த மாதிரி சில நேரங்களில் தவிர்க்கமுடியாத நிலைமைகளில் ஏற்படுகிற சூழ்நிலையே தவிர வேறு அல்ல. மற்றபடி தூத்துக்குடியிலே இருக்கிற நிறுவனம் ஆனாலும், எண்ணூரிலே இருக்கிற நிறுவனம் ஆனாலும் அவைகள் சிறந்த முறையில் இயங்கி வருகின்றன. ஓரளவு, ஏன் நான் அதை குறிப்பிடுகிறேன் என்றால், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிற இயந்திரங்களின் அளவுக்கு, நம்மால் இன்னும் ஈடுகட்ட முடியவில்லை. அதை ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும், பி.எச்.ஈ.எல். நிறுவனமாக இருந்தாலும் சரி, நம்முடைய எந்த நிறுவனமாக இருந்தாலும் சரி.

இன்றைக்கு நெய்வேலியிலே முழு உற்பத்தியளவு நமக்குக் கிடைக்கின்றது என்றால் அவை ரஷ்யாவிலே இருந்து நாம் பெற்ற இயந்திரங்கள். அதேபோன்று மராட்டியம், குஜராத் போன்ற மாநிலங்களிலே உற்பத்தி அதிகம் கிடைக்கின்றது என்றால் அவை எல்லாம் வெளிநாட்டிலே இருந்து வாங்கிய இயந்திரங்கள். பேசின் ப்ரிட்ஜிலே கூட இன்று உற்பத்தி சரியாக இருக்கின்றது என் றால் அதுவும் வெளிநாட்டிலே இருந்து வாங்கப்பட்ட இயந்திரங் கள். ஆகவே, வெளிநாடுகளிலே இருந்து இறக்குமதி செய்து (குறுக்கீடு) பேசி முடித்ததற்குப் பிறகு கேட்கலாம். வரைமுறை களுக்கு அப்பாற்பட்டவர்கள் எப்படி வேண்டுமானாலும் கேட்க லாம்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் முடித்ததற் குப்பிறகு உறுப்பினர்கள் சில கேள்விகள் கேட்பதற்கு அனுமதிப் பது வழக்கம். ஆகவே, பேசி முடித்த பிறகு கேட்கலாம். எனவே, திரு. ரகுமான்கான் அவர்கள் இப்போது அமரலாம். இப்போது குறுக்கிட்டுப் பேச வேண்டும் என்று விரும்பினால் அது அவைக்குறிப்பிலே ஏறாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் வெளிநாடுகளை நம்பி இருக்கக் கூடாது என்று நாமே நிறுவிய பி.எச்.ஈ.எல். தொழிற்சாலை மூலம் இப்போது இயந்திரங்களை உருவாக்கிப் பயன்படுத்துகி றோம். அதிலே குறைபாடுகள் இருக்கத்தான் செய்யும். இல்லை என்று நான் சொல்லவில்லை. பி.எச்.ஈ.எல். நிறுவனம் சரியில்லை என்று சொல்வது போலவும், அந்நிறுவனம் சரியாகப் பரா மரிக்கப்படவில்லை என்ற நிலையிலும் அதைப் பார்க்கக்கூடாது. வெளிநாடுகளிலே இருந்து வருகின்ற அளவுக்கு தொழில் நுட்ப ரீதியிலே நாம் உருவாக்கும் இயந்திரங்கள் இல்லை என்பதை அது